நல்லூர் கிளை நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆவணி 10 ஜுலகம் 19 இதழ் 197

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26-8-1986

## "தொடரும் வன்செயல்களினால் பேச்சுக்களை தொடருவதில் நெருக்கடி நிலை"

### -'அமிர்'

கொழும்பு, திங்கள் வடபகுதியில் வன்செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதனால் சமாதானப் பேச்சுக்களைத் தொடருவதில் தாம் நெருக்கடி நிலையை எதிர்நோக்கவேண்டியுள்ளதென கூட்டணிச் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ராணுவத்தினரே வன்செயல்களைத் தூண்டிவருகிறார்கள் எனக் குற்றஞ்சாட்டிய திரு அமிர்தலிங்கம், தொடரும் வன்செயல்கள்பற்றி ஜனாதிபதிக்குத் தான் அறிவித்துள்ளதாகவும் கூறினார். இந்த வன்செயல்களை நிறுத்துவதற்கு ஏதாவது செய்யப்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் குறித்து கூட்டணி அவசர முடிவெதனையும் எடுக்காது எனவும் தெளிவுபடுத்தினார். [ஊ]

# கோட்டை முகாமை அகற்றகோரி நாளை ஊர்வலமும் கடையடைப்பும்

யாழ்ப்பாணம் செவ்

யாழ். கோட்டை ராணுவ முகாமை அகற்றும்படி கோரி மக்கள் நடவடிக்கைக்குழுவினால் நாளை நடத்தப்படவுள்ள மௌன எதிர்ப்பு ஊர்வலத்தின்போது சகலமக்களும்ஒன்றுதிரண்டு வீதியில் அணிவகுத்து எமது வீடுகள் வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், நீதிமன்றங்கள், வர்த்தக நிலையங்கள் அலுவலகங்களை அழிவிலிருந்து காப்பாற்ற முன்வருமாறு மேற்படி அமைப்பு வேண்டுகோள் பிரசுரம் விடுத்துள்ளது.

இப்பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''ஆயிரம் மீற்றர் சுற்றுடல் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து குடாநாட்டில் ஏனைய இராணுவ முகாம்களின் சுற்றுடலில் குடியிருந்த மக்கள் விரட்டியடிக்கப்பட்டு வீடுகள், வழிபாட்டித்தலங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் தகர்க்கப்பட்டு அப்பகுதிகள் இராணுவ பிரதேசங்கள் ஆக்கப்பட்டுள்ளன. அதே அழிவு தமிழ்மக்களின் தலைநகர்யாழ். நகரத்திற்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளஅச்சம்தோன்றியுள்ளது.

எமது உயிர் வாழ்வுக்கான இந்தமௌன ஊர்வலம்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட—

# படையினரை விடுதலைபுலிகள் தாக்கியதில் பத்து பேர் பலி!

(அலுவலக நிருபர்)

'கிளிநொச்சி இராணுவமுகாமிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி மூன்று பாதைகளால் கவசவாகனங்கள் சகிதம் புறப்பட்ட 500க்கு மேற்பட்ட இராணுவத்தினரை, மும்முனைகளிலிருந்து விடுதலைப்புலிகள் எதிர்தாக்குதல் நடத்தியதில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி இராணுவமுகாமிலிருந்து நேமறுக் காலை 7 மணியளவில் மூன்று பாதைகளால் இராணுவத்தினர்வெளிவந்தனர்.

முகாமைவிட்டு வெளிவந்த இராணுவத்தினர் கணேசபுரம், பஸ்டிப்போசந்தி, திருநகர் ஆகிய மூன்று இடங்களையும் அண்மித்தபொழுது விடுதலைப்புலிகள் மும்முனைத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நேரடிச்சமர் நடந்தது.

சுமார் 4 மணித்தியாலங்க

(4ம் பக்கம் பார்க்க)

## 'மட்டக்களப்பு மாவட்டம் எமது கட்டுப்பாட்டினுள்'

### புலிகள் அறிவிப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டப் பகுதியை தமிழீழவிடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகளின் இருமருங்கும் போராளிகள் போர்க்கோலம் கொண்ட நிலையில் நிற்கக்காணப்பட்டனர்

நேற்றுமுன்தினம் முற்பகல்

(4ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பெண்கள்உட்பட ஐவர் பலி!

ஒட்டுசுட்டான் நிருபர்

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள திருநகர், கணேசபுரம் ஆகிய பகுதிகளில் விவசாய உற்பத்தியிலீடுபட்டிருந்தவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 3பெண்களும் இரு ஆண்களும் பலியானார்கள். பலர்படுகாயமடைந்தனர்.

இப்பரிதாபசம்பவம் நேற்று நடைபெற்றது.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களுள் இரு ஆண்களின் சடலங்களையும் இராணுவத்தினர் வைக்கோல் போருக்குள் போட்டு தீமூட்டி எரித்துவிட்டனர். இறந்தவர்களுள் அ. விஸ்வநாதன் [31 வயது] என்பவரும் ஒருவராவார்.

மேலும் எஸ். ரதீஸ், [20

[4ம் பக்கம் பார்க்க]

## இன்று மீண்டும் கூட்டணி-ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு நிருபர்)

தற்போது கொழும்பிலுள்ள கூட்டணியினருக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான பேச்சுக்கள் இன்று மீண்டும் ஆரம்பமாகின்றன

இன்று நடைபெறும் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான அரசியற் சாசன அமைப்புப் பற்றி மேலும் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி-கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் இறுதியாகக் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது தெரிந்ததே. [ஊ]

## கூட்டணியினர் அமைச்சர்கள் றொனி, காமினியைச் சந்தித்தனர்

கொழும்பு, திங்கள்.

தற்போது கொழும்பிலுள்ள கூட்டணியினர் நிதி, திட்டமிடல் அமைச்சர் றொனி டிமெல்லையும், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவையும் தனித்தனியாக இன்று சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

அமைச்சர் றொனி டிமெல்லுடனான பேச்சுக்கள் சுமார் இரு மணித்தியாலங்கள்வரை நடந்தன. அதிகார பரவலாக்கலில் நிதி ஏற்பாடுகள் குறித்து விவாதித்தனர். இந்தியா சென்றுள்ள நிதியமைச்சின் உயரதிகாரிகள் குழுவொன்று இன்னமும் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்காததால் இன்றைய கூட்டணி - நிதி அமைச்

(4ம் பக்கம் பார்க்க)

## மாமடுவ கண்ணிவெடியில் 5 இராணுவம் பலி

[நமது நிருபர்]

வவனியா மாவட்டத்திலுள்ள மாமடுவ என்னும் சிங்களக் கிராமத்தில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் ராணுவத்தினர்சென்றுகொண்டிருந்த ட்ரக் முற்றாகச் சேதமடைந்ததாகவும், அதிலிருந்த

[4ம் பக்கம் பார்க்க]

## 'ஷெல்' தாக்குதலில் இரு தேவாலயங்கள் சேதம்

பருத்தித்துறை, திங்கள்.

பருத்தித்துறை ராணுவமுகாமிலிருந்து கடந்த வாரம் ஏவப்பட்ட ஷெல்களினால் பருத்தித்துறைப் பகுதியில் இரு தேவாலயங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த தேவாலயமும், பருத்தித்துறை புனித அந்தோனியார் தேவாலயத்தின் முன்புறமுமே சேதப்படுத்தப்பட்டவையாகும். இவ்விரு தேவாலயங்களும் சேதமடைந்தமையினால் இப்பகுதி மக்கள் பெரும் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளனர். [எ]

## 'ஷெல்' தாக்குதலில் காயமடைந்தவர்களில் மேலும் இருவர் மரணம்!

யாழ்ப்பாணம், செவ்

கோட்டையிலிருந்து நேற்று முன்தினம் ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினால் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் இருவர் நேற்று மரணமானார்கள்.

யாழ் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாகவுள்ள புத்தகக்கடை உரிமையாளரான ஜே. ரி. பீரிசும் [45 வயது], கொக்குவிலைச் சேர்ந்த ராஜா [22 வயது] என்றஇருவருமே நேற்றுமரணமானவர்களாவர். ஜே. ரி. பீரிஸின் மகளான செல்வி றெஜி-பீரிஸ் 18வயது] நேற்று புத்தகக்கடையில் இருந்த சமயம் ஷெல் பட்டு ஸ்தலத்திலே மரணமானார் என்பது தெரிந்

(8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திறமான பலாப்பலகைகளும். Roadway சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி இராஜேந்திரா, பங்களா ஒழுங்கை, மல்லாகம்.
(C 4252)

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது சுவையானதும்கூட கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

யாழ்ப்பாணம், யாழ். வீதியில் 1¼ பரப்புக் காணியும், தொடர் வீடுகளும் விற்பனைக்குண்டு. வீடுகளை ஸ்ரோராகவும் பாவிக்கலாம். தொடர்பு கொள்ளவும்: நா. ஸ்ரீரங்கநாதன், 6, கன்னாதிட்டிறோட், யாழ்ப்பாணம். [C4238]

நவீன உபயோகித்தவீட்டுத் தளபாடங்கள். T. V, டெக், சிங்கர் தையல்மெஷின், மின் விசிறி, Bath Tub, தொட்டிகள், Baby Cot, Imported T. V. Stand, Pyrex, கிளாஸ் வகைகள், பித்தளை பொருட்கள், Show case, கண்ணாடி மேசைகள், Gas அடுப்பு, எழுதுமேசைகள், கட்டில் மெத்தைகள், புத்தக அல்மாரி ரீசெற், எலக்ரிக் குக்கர், பெற்றோமாச், கேற்றல், நேசறிஉபகரணங்கள் மற்றும்பல உடன் விற்பனைக்குண்டு M Thiagarajan, 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(C4217)

### வகுப்புகள்

க. பொ. த. [உயர்] 87 ஓகஸ்ட் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பகின்றன: 05-09-1986 மொடேண் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. [C4156]

A/L பரீட்சை எழுதியவர்கட்கு அரிய சந்தர்ப்பம் புதிய தொழில்நுட்ப வகுப்புகளான Electronic Engineering, Radio and T. V. (Antenna, Deck) வெல்டிங், வயறிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது. வெளிநாடு செல்பவர்கட்கு விரைவில் Courses முடிக்கப்படும். Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்திச் சந்திக்கருகாமையில்), 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 4247)

Computer Programming (Basic), Radio and T V Repairing Wiring, Draughtsmanship, Mechanical Draughtsmanship புதிய பிரிவுகள் ஆரம்பம்; 30-8-86. விபரங்கட்கு, Able Technical Studies K. K. S Road, Chunnakam (சுன்னாகச்சந்தியிலிருந்து 150 யார் வடக்கே). C 4257

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ
(A 1041)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் மாணவிகளுக்கு சாப்பாட்டுடன் / சாப்பாடில்லாமல் தங்குமிட வசதியுண்டு 148, சேர். பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (C 4245)

### 4-வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
அதிரூபஆத்மலிங்கம்
கௌரி அம்மன்
(ரவி ரெக்ஸ்ரைல், பருத்தித்துறை)
மலர்வு: 14-03-1976
உதிர்வு: 26-08-1982

கண்ணின் மணியே கௌரிஅம்மா எங்கள் துன்பம் துடைத்தவளே, கலங்கரை விளக்காய் வழிகாட்டியவளே, நீ மலராக உதிராமல் மொட்டாக உதிர்ந்து 4 ஆண்டுகள் மறைந்தாலும் உன் நினைவு எங்கள் இதய வீணையில் இசைத்து நினைவூட்டுகின்றது.

உன்பிரிவால் துடித்திருக்கும்:
ஐயா, அம்மா, அண்ணாமார், தங்கைமார், அன்புத்தம்பி.
ஆலடி, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை
(C 4091)

### தவறிவிட்டது

யாழ். மெயின் வீதி- பஸ்ராண்டுக்கிடையில் காசோலைப் புத்தகம் (இல 10777) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பிரதான வீதி மக்கள் வங்கியில் ஒப்படைக்கவும்.
(C 4259)

### சேவை

திருமணம் நிறைவேற்றுதல் சிறந்த பொருத்தத்துடனும், வரதட்சணையுடனும் ஒழுங்கு செய்துகொள்ளவும். காணி, வாகனம், கொள்வனவு, விற்பனவு ஒழுங்குக்கும் இன்றே நாடுங்கள்: தர்சினீஸ், அரசடிச்சந்தி, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (C 4098)

### 6-வது ஆண்டு நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை
கதிர்காமசேகரர்
(பிரபல சட்டத்தரணியும், நொத்தாரிசும்-J P)
மலர்வு: 1907-01-24
உதிர்வு: 1980-08-26

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மறவாத மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
''திருவேரகம்'', சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (C 4207)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

★ கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமதுமுகவர் உங்களை எதுவிதஇடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

★ சவூதிஅரேபியாவுக்கு மேசன், தச்சு, வீதித்திருத்தம், விவசாயம், தொழிலாளர் போன்ற பதவிகளுக்கு உடன் அனுப்பி வைக்கப்படும். செல்ல விரும்புவோர் 6 படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி எமது கிளை ஸ்தாபனம் ஒமேகா ரவல்ஸ் அன்ட் டூர்ஸ் என்னும் பெயரில் வேலணை வங்களாவடி சந்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்பு:
**N. BALA,**

பஸ்வழி இலக்கம்: 764, பலாலி வீதி, கோண்டாவில்.
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**ஒமேகா ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்**
வங்களாவடிச் சந்தி, வேலணை.
(A 1074)

## பணிவான வேண்டுகோள்

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தில் மின்சாரப்பகுதியில் கடமையாற்றும் செல்லையா- செல்வரத்தினம் ஆகிய எனது சொந்தப் பாவிப்பிலுள்ள கொண்டா மோட்டோர் சைக்கிள் சி. டி. 200 இலக்கம் 85 சிறி 302 பரந்தனிலுள்ள எனது வீட்டிலிருந்து சென்ற 16-07-86 இரவு பத்து மணியளவில் இனம் தெரியாத ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது இதனால் எனது கடமைக்கு செல்வது மிகக் கஷ்டமாக இருப்பதனால் புனிதமான இயக்கங்கள் இதைக் கண்டெடுத்துத்தருமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

செல்லையா-செல்வரத்தினம்,
மின்சாரப்பகுதி,
ப. இ. கூட்டுத்தாபனம்,
பரந்தன்.
(C 4255)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மன் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.

குவைத், அபுதாபி, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்

**GROUP ATLANTIC**
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
(A 1065)

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்
(இடைநிறுத்தப்பட்ட எமது டென்மார்க் பயணம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது)
கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்
(வாரத்தில் இருமுறைப் பயணம்)

லிபியா – (Labourers)
சவூதி – கிளீனேர்ஸ்
குவைத்– கிளீனேர்ஸ்
ஈராக் – ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**யூனிவேர்சல்**
ஏஜென்சி
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]
(A 1044)

### மணிவாக்கு

''அதர்மத்தை எதிர்க்காமல் மௌனமாக இருப்பது அதற்கு உடந்தையான குற்றத்திற்குச் சமம். அந்தக் கோழைத்தனத்துக்கும் தண்டனை உண்டு''
— பகவத்கீதை.

## நமது நோக்கு

# செங்கோல் எங்கே?

''நவநகர் என்ற சிற்றூரின் அரசன்; ஆனால் கிரிக்கெட் என்ற பெரு விளையாட்டின் சக்கரவர்த்தி'' என்ற புகழ் மாலையை பிரபல ஆங்கில எழுத்தாளர் கார்டினர் அன்று றஞ்சிற்சிங் என்ற வீரருக்கு சூட்டியிருந்தார்.

யாழ். கோட்டை ஷெல்லுக்குப் பலியான 35 வயதுடைய பிராமணோத்தமர் எஸ். சூரியகுமார் ஒரு சிறு வங்கியின் அரசன். ஆனால் கிரிக்கெட் என்ற பெரு விளையாட்டின் சக்கரவர்த்தியை இழந்தோமென்று எமது மக்கள் சார்பில் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்.

தமிழரின் தனிப்பிரதேச விளையாட்டரங்கில் வருங்கால வீரர்களை உருவாக்க வல்ல திறமையுடையவர் சூரியகுமாரன்; யாழ் ஷெல் துன்ப நாடகத்தின் இன்றைய கதாநாயகன்.

றோயல் சென்தோமஸ் போன்ற பிரபல கொழும்புக் கல்லூரிகள் தான் கிரிக்கெட் விளையாடவல்லவை என்ற தவறான கருத்தை அன்று கொழும்பு ஆனந்தாக் கல்லூரி கிரிக்கட் கப்டன் டாக்டர் என்.எம். பெரேராவும், இன்று யாழ் இந்துக்கல்லூரி பழைய கிரிக்கட் கப்டன் சூரியகுமாரும் தகர்த்தெறிந்தனர்.

எவ்வாறு கிரிக்கெட் அல்லாதமுறையில் டாக்டர் பெரேராவை அன்றைய சுதந்திரக் கட்சி ஆட்சி 'அவுட்' ஆக்கியதோ; இன்று அதனிலும் கொடிய முறையில் இன்றைய ஆட்சி, 'பயங்கர' சுழல் பந்து வீச்சாளர் சூரியகுமாரனை இவ்வுலக வாழ்விலிருந்தே 'அவுட்' ஆக்கிவிட்டது.

மணமகனைப் பிணமகனாக்கி, மணப்பறையைப் பிணப்பறையாக்கிய யாழ். 'ஷெல்' அனால் சோகத்தில் ஆழ்ந்திருந்த நகர மக்களை அடுத்த இடிக்கு ஆளாக்கியது.

ஒரு இந்தியன் ஒரு ஆங்கிலேயனின் விளையாட்டை மிகத்திறம்பட விளையாடுகிறான் என்று அதிசயப்பட்டனர் 'ஜம் சாகிப்'பின் விளையாட்டை ரசித்த ஆங்கில மக்கள்.

சுத்த போசனகாரப் பையன். மாமிசம். உண்ணும் விளையாட்டு வீரரை வெட்கப்படுத்துமளவிற்கு விறுவிறென அவுட் ஆக்குகிறான்' என்று 'ஈழநாடு' அன்று விமர்சித்தது.

சூரியகுமாரன் உட்பட 4 பேர் பலியானதும், 25 பேர் காயமடைந்ததும், யாழ். நகரின் பெரிய கடையில் அடுத்தடுத்து நிகழும் அவலச்சம்பவங்களின் உச்சம்.

யாழ். நகரை முற்றாக அழித்துவிட ஒரு இரகசியத் திட்டம் உண்டா? இவ்வாறு நகர மக்கள் அஞ்சுவதற்கு போதிய நியாயமுண்டு.

தமிழ்ப்போராளிகள் கோட்டையைத் தாக்கினால் அதன் விளைவு எவ்வாறிருக்குமென்ற எச்சரிக்கை முன்னொருமுறை வழங்கப்பட்டது.

இதற்குப் பரிகாரம்காண எடுத்த பிரயத்தனங்கள் பலனற்றவை என்பதே இன்று தொடரும் கோரச்சம்பவங்கள்.

மக்கள் அனுமதியின்றி அவர்களை ஆடசிப்படுத்துவது ஜனநாயகமாகாது. இக்கட்டான இந்த நேரத்திலும் இதனை நாம் ஆட்சியாளருக்கு நினைவூட்டுவது அவசியம்.

இந்த 'ஷெல்' கொலை உடனடியாக நிறுத்தப்படவேண்டியது. இதற்கு நீண்டகால இனப்பிரச்னை பேச்சுக்கள் உதவா. இந்த அமாவாசை அவ்வித 'ஐயர்மாரின்' ஆணைக்குக் காத்திராது.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை மையமாகக் கொண்ட யாழ்ப்பாணம் சுப்பர் மார்க்கட் பகுதி நகரின் கேந்திர ஸ்தானம் யாழ். கோட்டையிலிருக்கும் இராணுவம் எதுவும் இப்பகுதியைக் காப்பதைக் கடனாகக் கொள்ள வேண்டும்.

இதற்கு நேர்மாறாக அமைந்திருக்கும் இன்றைய அவல சூழ்நிலை உடனடியாக அகற்றப்பட வேண்டும். இதற்கு உதவாத அரசு தமிழ்மக்களின் ஒத்துழைப்பை எந்த அரசியல் தீர்விலும் கனவு காண்பதரிது.

நியாயஉணர்வு தர்மத்தில் பிறந்தால்தான் நாடு உய்யும். தமிழக மன்னர் செங்கோல் முறையை சிலப்பதிகாரமென்ற தமிழ்காப்பியமும், புத்ததர்மத்தை அறிவுறுத்தும் மணிமேகலையும் நயம்பட உரைத்திருக்கின்றன.

ஈஸ்வரனையே நாம் இன்று பிரார்த்திக்கவேண்டும். வாய்விட்டு உரத்துத்தான் பிரார்த்திக்க வேண்டுமென்பதில்லை நமது மனத்தின் குரலும் அவனுக்குக் கேட்கும் ''எறும்பின் காலடி சத்தம் கூட இறைவனின் காதுகளில் விழும்'' என்கிறார் ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

## நெல்கொள்வனவுகுறித்து சுவரொட்டி

இராமநாதபுரம், திங்.

''ஒரு புசல் நெல் ரூபா 275 தொடக்கம் ரூபா300 உட்படக் கொள்வனவு செய்தல் வேண்டும். உற்பத்தி வளத்தைப் பாதுகாப்போம்.'' என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் கிளிநொச்சி, இராமநாதபுரம், வட்டக்கச்சி, முரசுமோட்டைப் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன. இவ்வேண்டுகோள் சுவரொட்டிகளில் ஈ. பி. ஆர். எல். எவ் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

கல்விப்பணிப்பாளர் நன்றி கூறுகின்றார்

# க. பொ. த. பரீட்சைகள் இடர்பாடின்றி நடைபெற்றன

யாழ்ப்பாணம், திங்கள்

''அண்மையில் நடந்தேறிய க. பொ. த. ப. (உயர்தர) பரீட்சையை கிவற்றிகரமாகச் செயற்படுத்தழுஉதவிய அனைவருக்கும் யாழ் கல்வித்திணைக்களத்தின் சார்பில் நன்றி கூறுகிறேன். ஆகஸ்டுமாதம் 1ம் திகதி ஆரம்பித்த இப்பரீட்சை யாழ் மாவட்டத்தில் 64 பரீட்சை மண்டபங்களில் 25 நாட்களாக எவ்விதஇடர்ப்பாடுமின்றி நடைபெற்றது.'' இவ்வாறு யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இளஞ்சந்ததியினரின் எதிர்காலம் சமைக்கும் பரீட்சையாகையால் பலபெரியார்கள் மிகவும் உற்சாகத்துடன்எமது கல்வித்திணைக்களத்துக்குஉதவ முன்வந்தார்கள். பெற்றோர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள், அத்துடன் விழிப்புக்குழுக்கள், மாணவஅணிகள்' கல்வு அபிவிருத்தி மன்றங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் முழுமையான பங்களிப்புகளும் இப்பரீட்சையை சிறப்பாக நடாத்துவதற்கு உதவியளித்தன. இதற்காக உழைத்தசகலருக்கும் நன்றி கூறுகிறேன் என அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

''பரீட்சை மண்டபங்களில் ஆள் மாறாட்டமோ அன்றி எவ்வகையான அசம்பாவிதங்களோ இம்முறை இடம்பெறாமைக்கு இப்பெரியார்களின் ஈடிணையற்ற செயற்பாடுகளும் கல்வி உத்தியோகத்தர்களின் சிறப்பான சேவையுமேகாரணமாக அமைந்தன. பரீட்சைக்கான அந்தரங்கப் பொதிகளைப் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து தருவித்தல், பரீட்சையை ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப நடத்துதல், விடைத்தாள் பொதிகளைப் பாதுகாப்பாக மீண்டும் பரீட்சைத் திணைக்களத்துக்குப் புள்ளி வழங்க அனுப்புதல் ஆகிய செயற்பாடுகளில் என்னுடன் அச்சந்தவிர்த்து இரவுபகலாக நின்று உழைத்த எமது திணைக்கள உத்தியோகத்தர்களைப் பாராட்டுகிறேன். வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகளும் ஊழியர்களும் யாவரும் விரும்பும்வகையில் சேவையாற்றியமையை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். இப்பரீட்சைக்கு உதவியமை போன்று எதிர்வரும் பரீட்சைகளிலும் எமக்கு ஒத்துழைப்பும் அனுசரணையும் நல்குமாறு கல்வியில் அக்கறை கொண்டுள்ள சகலரையும் அன்பாக வேண்டுகின்றேன் என கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஆ)

## மக்கள் கருத்து

### பிரவுண் வீதி

யாழ். நகரிலுள்ள முக்கியமான வீதிகளில் பிரவுண் வீதியும் ஒன்று இவ்வீதியால் தொழில் நுட்ப நிறுவனம். யாழ் பல்கலைக்கழகம் மருத்துவ பீடம் ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களும் பொதுமக்களும் நாளாந்தம் பிரயாணம்செய்கிறார்கள். ஆனால் இவ்வீதி, நாவலர் வீதி தொடக்கம் தொழில் நுட்ப நிறுவன வீதி வரைக்கு ஒரே குன்றும் குழியுமாக உள்ளது. பிரயாணம் செய்வது மிக மிக கஷ்டமாகவும் நிலைமை இன்னும் மோசமாகவும் இருக்கின்றது. வீதி விளக்குகள் சரிவர எரிவதில்லை. ஆகவே இவ்விடயத்தை மதிப்புச்குரிய ஆணையாளர் கவனிப்பாரென நம்புகின்றோம்.

தி. சே. அண்ணாசாமி,
ம. மகாலிங்கம்,
ந. மகாதேவன்.

அரசடி வீதி;

### 25 பேருக்கு வீடமைப்புக்கடன்

வேலணை, திங்கள்

பத்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த புங்குடுதீவுக் கிராமத்தில் இருபத்தைந்து பேருக்கு புதிய வீடுகளை அமைப்பதற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் வழங்கும் திட்டத்தில் புங்குடுதீவு மத்தியில் ஆறு பேருக்கும், புங்குடுதீவு கிழக்கில் பத்துப்பேருக்கும். புங்குடுதீவு மேற்கில் ஒன்பது பேருக்கும் புதிய கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

### நல்லசேவை

யாழ்ப்பாணம், செவ்

காரைநகர் மக்களின் குடிதண்ணீர் கஷ்டத்தைப்போக்க மருதடியைச் சேர்ந்த திரு. கந்தப்பு சுப்பிரமணியம் ஐம்பதினாயிரம் ரூபா செலவில் தனது வளவில் நீர்த்தாங்கி ஒன்றை அமைத்து குழாய் நீரை மக்கள் பெறுவதற்கான முயற்சிஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இதற்கான வேலையின்பெரும்பகுதி பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இவர்முன்பும் பொதுக் கிணறுஒன்றை அமைப்பதற்கு தனது காணியின் ஒருபகுதியை கொடுத்து உதவினார். (சி)

### நல்லை வள்ளல்

நல்லைப் பதிவள்ளல் நாம்பணியும் நல்லகுஹன்
தொல்லை தொலையத் துரத்துபவன் சொல்லும்
இன்பமுள்ள நல்வாழ்வை இத்தரணி யில்லீந்து
நின்றருள்வான் நித்தம் நினை.

சகதிக்குள் வீழ்ந்தாற்போல் தத்தளிக்கும் மக்கள்
அகதிகள் ஆயிடினும் ஐயன் புகலிடத்தை
ஈந்தவரை ரட்சிப்பான் ஈர்வளமும் மிக்கநல்லை
வேந்தனவன் வேலுண்டு வேண்டு.

தில்லை நடராசன் திருமூர்த்த மாய்வந்த
நல்லைநகர்ப் பேரரசன் நம்சேந்தன் ஒல்லையிலே
ஓடிவந்து காத்தருள்வான் ஒன்னலரைக்
கொன்றழிப்பான்
பாடித் துதிப்பீர் பணிந்து.

கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லூர்க் கந்தன் 17-ம் திருவிழா]

ஃ ஃ ஃ ஃ

### நாளும்மகிழ அருள்புரிவாய்

நல்லூர்க் கந்தா வணங்குகிறோம்
நலன்கள் புரிவாய் வணங்குகிறோம்
அல்லல் தீர்த்தே எமக்செல்லாம்
அருளாம் செல்வம் நல்கிடுவாய்
எல்லார் கார்த்திகை நாளில்
இடர்கள் யாவும் நீக்கிடுவாய்
நல்லோர் துயர்கள் காணாதே
நாளும் மகிழ அருள்புரிவாய்.

சூரியகலா கைலாசபிள்ளை
ஆவக்கோட்டை.

ஃ ஃ ஃ ஃ

### வல்வினை தீர்க்கும் நல்லைச் செல்வன்

இயற்கை வளம் சிறந்தோங்கி மிளிர்வதோடு
எழில்மிக்க செயற்கைவளம் இணைந்த யாழில்
சொலற்கரிய அருட்பதியாம் நல்லை தன்னில்
தொல்புகழார் குமரவேள் துணை நிற்பாரே

ஐங்கரனை அகமிருத்தி விக்கினங்கள் தீர
அருகருகே வள்ளி தெய்வயானை சார
செங்கையிலே வீரவேல் சிறந் திலங்க
செகம்வளந்த மஞ்ஞையிலே செம்மல் வாரீர்

மாவலியின் கரைமருவு மணல்போற் கூட்டம்
வழிவழியே பசனை யடியார் குழுக்கள்
சூழ்நிலை அதிரவெழும் அரோ கராக்கள்
சுழன்றெழுந்து பரவசத்தால் ஆடும் பக்தர்

ஆறுபடை வீடுடைய அரசே உன்தன்
அருட்கரத்தி லிலங்கு மணிவேலைக் கண்டால்
ஓடிவிடும் தீவினைகள் ஒன்றும் மிஞ்சா
ஒருமனதாய்ச் சரவணனை உளத்தில் வைப்பாம்

ஓடுகின்ற பாய்மரத்தின் காக மாகி
உலைந் தொழியு மான்மாக்களுய்ந் தீடேறி
வீடகத்தை அடைவதற்கு வினைகள் தீர
வேலவரே பச்சை மயில்மீது வாரீர்

சு. நா. கந்தையா, ஜே. பி.

# ஷெல்' தாக்குதல் மத்திய கல்லூரி விடுதி பலத்த சேதம்!

யாழ்ப்பாணம், செவ்

யாழ் மத்திய கல்லூரி மாணவர் விடுதி நேற்று முன் தினம் நடந்த 'ஷெல்' தாக்குதலால் பலத்த சேதத்துக்குள்ளானது ஆரம்ப பாடசாலையும் சேதமடைந்துள்ளது,

இம்மாதம் 10-ம் திகதி யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் விடுதியும் 'ஷெல்' தாக்குதலால் சேதமடைந்தது. இச்சேத மதிப்பீட்டை யாழ். கல்வித்திணைக்கள அதிகாரிகள் மதிப்பீடு செய்திருந்தனர்.

யாழ். கோட்டை முகாமுக்கு சமீபத்திலுள்ள இவ்விருகல்லூரிகளின் விடுதிகளுக்கும சேதமேற்பட்டிருப்பதால் விடுதியில் தங்கி கல்வி கற்கின்ற மாணவர்கள் மத்தியில் அச்சம் நிலவுதாகத் தெரிகிறது. (ச)

## ஷெல்தாக்கி: சேதம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ். நகரில் ஞாயிறன்று இடம்பெற்ற 'ஷெல்' தாக்குதல் சம்பவத்தில் யாழ். மாநகர சபையின் இலவச ஆயுள்வேதவைத்தியசாலையின் கூரைப் பகுதியும் மற்றும் யன்னல் கண்ணடிகளும் சேதமடைந்தன. அத்துடன் வைத்தியசாலை அமைந்துள்ள பகுதியில் ஷெல் விழுந்து பாரிய கிடக்குகளும் ஏற்பட்டுள்ளன. [எ]

## கூட்டணியினர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர் சந்திப்பின்போது எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை. அறிக்கை கிடைத்ததும் இப்பேச்சுக்கள் தொடரவுள்ளன.

பின்னர் அமைச்சர் காமினி திஸநாயக்காவைச் சந்தித்த கூட்டணியினர் மாகாண சபைகளுக்கான காணி ஒதுக்கீடுகள்பற்றிப் பேச்சுக்கள் நடத்தினர். [ஊ]

## யாழ்ப்பாணம்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக நடைபெற்ற இக்கடும் சமரில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும்; பலர் படுகாயமடைந்ததாகவும் மேலும் இச் சமரின்பின்னர் ரி 56 ரகததுப் பாக்கி, எறி குண்டுகள், எம். 203 எறி குண்டுகள் உணவுப் பண்டங்கள் தமது போராளிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தமிழீழவிடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுகிறது.

இதேசமயம் கிளிநொச்சியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 2 இராணுவத்தினர் பலியானதாகவும இரு இராணுவ உயரதிகாரிகள் உட்பட ஏழுபேர் படுகாயமடைந்ததாகவும அரசாங்கம் அறிவுத்துள்ளது. [மா]


## விற்பனைக்கு

E L Morris Minor கார் ஒன்று விற்பனைக்கு உண்டு தொடர்புகொள்க: 263, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். C 4264)

## தேவை

Wheel Chair சார்மனைக் கதிரை தேவை, உடன் தொடர்புகொள்க: 263, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். [C 4263]

நல்ல நிலையில் உள்ள Model 74-83ற்கு பின் உள்ள கார் உடன்தேவை விபரங்களுக்கு, HOTEL GNAAMS, 299, Clock Tower Road, Jaffna. Tel.22082, 23067. (A1077]

லிடோ

காலை 10-30, 2-30, 4-30, 6-30.

Dragon Lee-Aa Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)

அடுத்த வெளியீடு
அந்த 7 நாட்கள்

வெலிங்டன்
வெண்திரையில்

10-30, 2-30, 6-30
Su Sanah York-AlanBates
John Hurt
in
The Shout
New Release


## 30-ம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் முத்துத்தம்பி செல்லத்துரை

தோற்றம்: 4-10-1920
மறைவு: 28-7-1986

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொண்ட எம் அன்புத் தெய்வமே! எங்கள் குடும்ப ஒளிவிளக்கே! உங்கள் மதிமுகமும் சொல்லும் செயலும் எங்களால் மறக்க முடியுமா? நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மரணச் சடங்கில் பங்குகொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் பங்குபற்றியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனைவி - பிள்ளைகள்

சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில். [C4268]

## மட்டக்களப்பு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

செங்கலடி, ஏறுவூர் எல்லைச் சந்திமுதல், மட்டக்களப்ப வரையும் வாழைச்சேனை மார்க்கத்திலுள்ள பிரதான வீதி தொடக்கம் வந்தாறு மூலைவரை இருமருங்கும் போராளிகள் ஆயுதபாணிகளாக நின்றனர்.

கல்குடாத் தொகுதியைச் சேர்ந்த கரடியனாறு, ஏறுவூர், மொறக்கொட்டாஞ்சேனை ஆகியபகுதிகளிலுள்ள ஆயுதப்படையினரின் முகாம்களை நேற்றுமுன்தினம் முதல் தமது கட்டுபபாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது,

தினசரிரோந்து நடவடிக்கையிலீடுபட்டுவந்த மேற்குறிப்பிட்ட முகாம்களைச் சேர்ந்த ஆயுதப்படையினருக்கும் தமது இயக்கப் போராளிகளுக்குமிடையே நேரடிச்சமர் இடம்பெற்றதாகவும் இச்சமரின்போது கரடியனாறு, ஏறுவூர், மொறக்கட்டாஞ்சேனை முகாம்களிலிருந்து ஆயுதப்படையினர்எடுத்த தாக்குதல் முயற்சிமுறியடிக்கப்பட்டதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது.

மேற்குறிப்பிட்ட முகாம்களிலுள்ள ஆயுதப்படையினருக்கு உதவியாக வந்த விமானப்படையினரும்ரயில்மார்க்கமாக வந்த முப்படையினரும் மேற்கொண்ட தாக்குதல் முயற்சிகளையும் தமது இயக்கப் போராளிகள் முறியடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## கோட்டை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் நடவடிக்கை என்பதை உணர்ந்து சகலரும் இந்தஊர்வலத்தில் பங்குபற்றி ஆட்சியாளரின் அடக்குமுறைக்கெதிராக உலக அபிப்பிராயத்தைத்திரட்ட மக்கள் அணிவகுக்கவேண்டும். தம் இராணுவமுகாம் பாதுகாப்பிற்காக தமிழ் மக்களின் பழம்பெரும் யாழ்நகரை அழிப்பதை நிறுத்தியாழ். கோட்டை இராணுவ முகாமை அவ்விடத்திலிருந்து அகற்றும்படி கோருகிறோம்''

## மாதர் அமைப்பு வேண்டுகோள்

நாளை நடைபெறவுள்ள மௌன ஊர்வலத்தில் மாதர் அவை உறுப்பினர்கள் ஒவ்வொருவ பங்குபற்றி அனைத்து ஒன்றியங்களுடனும் இணைந்து எமது கூட்டு எதிர்ப்பை அரசிற்கு தெரிவிக்கும்படி மேற்படி அமைப்பு அறிக்கைமூலம் கேட்டுக்கொண்டுள்ளது.

## வர்த்தகர் சங்கம் கடையடைப்பு

நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கும் மௌன ஊர்வலத்தில் வர்த்தக நிலையங்களிலுள்ள சகலரும் பங்குகொள்ளும் வகையிலும் வர்த்தகர்களின் ஏகோபித்த எதிர்ப்பைத் தெரிவிக்க ஏதுவாகவும் அன்றைய தினத்தில் பூரணகடையடைப்பை மேற்கொள்வதுடன் மௌன ஊர்வலத்தில் கலந்து கொள்ளவும் தீர்மானித்துள்ளதாக யாழ் வர்த்தகர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## தமிழ் மகளிர் அவை வேண்டுகோள்

நாளை நடைபெறும் மௌன ஊர்வலத்தில் வெகுஜனஅமைப்புக்கள், தொழிலாளர் சங்கங்கள் வர்த்தக அமைப்புக்கள் மாணவ மாணவிகள், அரசு, தனியார் ஊழியர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு தமிழ் மகளிர் அவை வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது. [ஒ-ரா]

# "சகல ரணுாவ முகாம்களை உடனடியாக அகற்றுக!"

### யாழ். வர்த்தகர் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்

''தமிழ்பேசும்மக்களின்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நீங்கள் ஆர்வமாயிருந்தால், இராணுவத்தினர் அப்பாவி மக்களைக் கொன்று, உடமைகளைச்சேதப்படுத்துவதை நிறுத்த உத்தர விடுவதுடன், சகல இராணுவ மற்றும் பாதுகாப்பு முகாங்களையும் உடனடியாக அகற்ற வேண்டும்''.

இவ்வாறு யாழ்.கோட்டை இராணுவத்தினரின் செயல்களைக் கண்டித்து யாழ்.வர்த்தகர் சங்கத்தினரால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கபொதுச் செயலாளர் திரு நமசிவாயம் அனுப்பி வைத்துள்ள இம் மகஜரில் மேலுல் குறிப்பிடப்பட்டுள்ள தாவது!

''கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்படும்ஷெல், பீரங்கித்தாக்குதல்களினால் குழந்தைகள், மாணவர்கள், வயோதிபர்கள் உட்பட பல அப்பாவி மக்கள்கொல்லப்பட்டுள்ளனர் பலகட்டிடங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன, இராணுவத்தினர், 1000 மீற்றர் பாதுகாப்புவலய எல்லையையும் மீறி பீரங்கி. ஷெல் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

''இப்பகுதியிலுள்ள மக்களையும் வர்த்தகர்களையும் இப்பிரதேசத்தைவிட்டு வெளியேறும்படிமறைமுகமாக நிர்ப்பந்திப்பதைவிட்டு இம் முகாமை அகற்றி மக்களைக் காப்பாற்றுவது காலச்சிறந்தது''.

## காரைநகரில்: 'ஷெல்' தாக்குதல் இருவர் காயம்

[நமது நிருபர்]

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். பலர் சிறு காயங்களுக்குள்ளானார்கள்.

என். குகதாசன் [19 வயது] என். ரஞ்சன் [17 வயது] ஆகியஇருவரும் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்படை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் காரைநகர் பஸ்டிப்போவில் வந்து விழுந்த சமயமேபலர் காயமடைந்தனர். [ஒட்டு நி. மா]

## மாமடுவ...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

5 ராணுவத்தினர் பலியானதுடன் பலர் படுகாயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது. (மா)

## துப்பாக்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வயது], வசந்தன் [20 வயது] வைகுந்தநாதன் [34வயது] ஆகியோர் படுகாயமுற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே கடுமமோதல் ஏற்பட்டது. இராணுவத்தினருக்கு உதவியாக ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இரு பொம்பர் விமானங்களும் குண்டுவீச்சில் ஈடுபட்டிருந்தன.

இத்தாக்குதல்களை எதிர்த்து போராளிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினர். (மா]

## இராணுவம்சென்ற ரயில்மீது தாக்குதல்

கொழும்பு, திங்கள்

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சரக்கு ரயிலை தீவிரவாதிகள் தேவன்புரம் என்ற இடத்தில் வைத்து தாக்குதல் நடாத்திய பொழுது ரயிலில் பயணம் செய்த இராணுவத்தினர் இத்தாக்குதலை முறியடித்துள்ளனர் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. [இ]

## கோரிக்கை

பருத்தித்துறை, திங்கள்

யாழ்ப்பாணத்தில் வைத்து இனம் தெரியாதவர்களால் சடத்திச்செல்லப்பட்ட சமூக சேவையாளரும் பயிர்ச் செய்கை உத்தியோகத்தருமான திரு. எஸ். செந்துராசாவை விடுவிக்க புனித இயக்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பருத்தித்துறைத் தொகுதி உடுப்பிட்டித் தொகுதியின் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.


குரு வீடியோ புதிய பட
இன்றைய வெளியீடு
1:- மௌன ராகம்.
* மோகன் * ரேவதி *
குரு வீடியோ சென்ரர்
180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி:-22779 [C-4266]

நன்றி

எமது திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த திரு. இராமநாதன் அவர்களுக்கும் மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள் உறவினர்களுக்கும்

மிது வீடியோ மூவிஸாரின்
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
எமது இன்றைய புதிய வெளியீடுகள்
பிரபு. ரஞ்ஜினி, செந்தில் நடித்த
★ நாளெல்லாம் பௌர்ணமி
சிவகுமார் நடித்த
★ பன்னீர் நதிகள்
மிது வீடியோ மூவீஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
(C-4262)

# "சமுதாய முன்னேற்றமே ச. சமூகநிலையத்தின் குறிக்கோள்"

பண்டத்தரிப்பு, திங்கள். சமுதாயத்தை முன்னேற்றுவதே சனசமூக நிலையங்களின் முக்கியகுறிக்கோளாகும். கிராமிய மக்களின் அபிலாசைகளை மனதிற் கொண்டு கிராமத்தின் தேவைகளை நிறைவேற்ற சன சமூக நிலையங்கள் பாடுபடவேண்டும். கிராம மட்டத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ளுவதற்கு இது போன்ற சமாஜங்கள் அவசியமாகும்"

இவ்வாறு சண்டிலிப்பாய் உதவிஅரசாங்க அதிபர் பிரிவு சன சமூக நிலையங்களின் சமாஜத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் குறிப்பிட்டார்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு சண்டிலிப்பாய் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ம. சரவணபவஐயர் தலைமைவகித்தார்

திரு. அன்ரன் அல்பிரட் அங்கு உரையாற்றுகையில்; "ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு உட்பட்ட அரசாங்க ஒப்பந்த வேலைகளை பொறுப் பேற்று செய்வதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. எனவே சன சமூக நிலையங்கள் தங்கள் பகுதிகளில் வீதி திருத்தம், சிறிய கட்டிடங்கள் அமைத்தல் போன்ற வேலைகளுக்கு ஒப்பந்தம் எடுத்து அதன் மூலம் வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் சிரமதானப் பணிகளிலும் சன சமூக நிலையங்கள் ஈடுபட்டு பொதுப்பணி ஆற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி. சாந்தினி சுப்பிரமணியம் உரையாற்றுகையில்; "நாட்டின் முதுகெலும்பாக அமைவது கிராமங்களேயாகும் இக் கிராமங்களின் வளர்ச்சியில் அதிக அக்கறை செலுத்த வேண்டியது சன சமூக நிலையங்களின் கடமை. கிராம மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் இந்த நிலையங்கள் தொண்டாற்ற வேண்டும்" என்றார்.

யாழ். மாவட்ட தலைமை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. த.பாஸ்கரன் உரையாற்றுகையில்; 'யாழ்' மாவட்டத்தில் 797 சன சமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன என்றும், இந்த நிலையங்களுக்கு இவ்வருடத்திற்கான உதவி நன்கொடைப் பணம் பெறுவதற்காக தரம்பிரித்து பட்டியல் தயாரித்து கொழும்பிலுள்ள உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்"

இறுதியில் சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகளின் கலந்துரையாடலும் நடைபெற்றது. (வா)

## யாழ். ஆஸ்பத்திரி நலன்புரிச்சங்கம் கோரிக்கை

மானிப்பாய், திங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்கள் படித்து மன ஆறுதல் அடையக்கூடிய வகையில் உபயோகமான நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றை அன்பளிப்புச் செய்யுமாறு யாழ். ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச்சங்கத்தினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

இவ்விதம் நூல்களை அன்பளிப்பது இங்குதங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளருக்கு செய்யும் நல்ல உதவியாக இருக்குமென இச்சங்கத்தின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

சிறுவர் வார்டில் சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்கள் உபயோகிக்கக்கூடிய விளையாட்டுப் பொருள்கள் படங்கள் ஆகியனவும் அன்பளிப்புச் செய்யவிரும்புபவர்கள் அவ்விதம் செய்தால்வரவேற்கத்தக் தாக இருக்குமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது (இ)

## புதியகட்டிடம் அமைக்கஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ் மன்னார் கோவிற்குளம் அரசினர் தமிழ் வித்தியாலயத்திற்கு ஒரு லட்சத்து எழுபத்தேழாயிரம் ரூபா செலவில் புதிய கட்டிடம்ஒன்று அமைக்க ஏற்பாடாகியுள்ளது

மேற்படி வித்தியாலயத்தை கனிஷ்ட வித்தியாலயமாக தரமுயர்த்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன

பாடசாலை அதிபர் திரு சி. கணபதிப்பிள்ளை அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. எஸ். சிற்றம்பலம் ஆகியோரின் முயற்சியால் கோவிற்குளம் வித்தியாலயம் குறுகிய காலத்துள் துரிதமுன்னேற்றம் அடைந்துவருவது குறிப்பிடத்தக்கது. [ச]

## சருமவைத்திய சிகிச்சை

பருத்தித்துறை, திங்கள் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில்மாதமொரு தடவை நடைபெற்று வந்த சருமவைத்திய சிகிச்சை தற்பொழுது ஒவ்வொருநாளும் நடைபெற்றுவருகின்றது.

முன்னர் டாக்டர் திருமதி குகதாஸன் மட்டுமே பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மாதமொருமுறை மேற்படி சிகிச்சையைநடாத்தி வந்தார். தற்பொழுது இவ் வைத்தியசாலைக்கு டாக்டர் திருமதி வேலும்மயிலும் இடமாற்றம்பெற்று வந்ததையடுத்து இவ் வைத்தியசாலையில் நாள்தோறும் சரும வைத்திய சிகிச்சை நடைபெற்று வருகிறது.

இதேவேளை பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மாதமிருமுறை நடாத்தப்பட்டுவரும் மனநோய் வைத்தியசிகிச்சையை மாதம் நாலுமுறை நடாத்தஆவனசெய்ய வேண்டுமென்று பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

## கிராமோதய சுகாதாரக்குழு

மாவிட்டபுரம், திங்கள் பலாலி கிராமத்தில் ஒன்றிணைக்கப்பட்ட கிராமோதய சுகாதார சேவையின்கீழ் கிராமோதய சுகாதாரக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மக்களிடையே சுகாதாரப் பழக்க வழக்கங்களை அறிமுகப்படுத்தவும் முதலுதவி பயிற்சியாளர்களைத்தெரிவுசெய்து மக்களுக்கு உதவவும் மற்றும் பல்வேறு பணிகளுக்காகவும் இக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குழுவின் உறுப்பினர்கள் வருமாறு:-

தலைவர் ஏ. தேவதிரவியம், உப தலைவர் அ. ஜெனோபா, செயலாளர்வே. வெனுச்சியூஸ், உப செயலாளர் த யோகராஜா. பொருளாளர் அ. செல்வராஜா.

நிர்வாக சபை உறுப்பினர்களாக ந. முகுந்தன், பொ. அனித்தா, க. பவானி த. துரையான் ஆகியோர் தெரிவாகினர். (எ)

## காணித்தகராறு: அண்ணனின் கையால் தங்கை பலி!

(மூதூர் நிருபர்)

காணித் தகராறு தொடர்பாக தனது தங்கையையே கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார் அண்ணன் ஒருவர்

இச் சம்பவம் அண்மையில் வான்எல பொலிஸ் பகுதியிலுள்ள ஜயந்திபுர என்னும் இடத்தில் இடம்பெற்றது. ஆர் ஏ.விமலாவதி [22]என்னும் ஒரு குழந்தைக்குத் தாயானவரே கொலை செய்யப்பட்டவராவர்.

இவரைக் குத்திய இவரது மூத்த சகோதரர் ஆர். ஏ விக்கிரமரத்தின என்பவர் பின்னர் பொலிஸில் சரணடைந்ததையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் மரண விசாரணைகளை திருமலை பதில் நீதவான் திரு ஆர் சந்திரபாலன் திருமலை மருத்துவ மனையில் வைத்து மேற்கொண்ட போதே சாட்சியங்கள் மூலம் தெரியவந்ததாவது: சந்தேகநபருக்கும் இறந்தவருக்குமிடையில் சில காலமாக ஒரு காணி சம்பந்தமாக தகராறு இருந்து வந்ததாம் சம்பவ தினத்தன்று காலையில் சகோதரியின் வீட்டுக்குக் கத்தியுடன் வந்தவர் அவரைக் குத்தி விட்டு ஓடிச்சென்று பொலிஸில் சரணடைந்தாராம்

கொலையெனத் தீர்ப்பளித்த பதில் நீதவான் சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டரர். (எ)

## இளைஞர் பிரசாரம்

நெல்லியடி, திங்கள் மிக விரைவில் உடுப்பிட்டி சல்வி வட்டாரத்தில் நெல்லியடிப் பகுதியில் கல்விக்காரியாலயம் ஒன்று திறந்துவைக்கப்படவுள்ளது. இதன் பயனாக யாழ். கல்வி அலுவலகங்களின் கடமைகள் பரவலாக்கப்படுவதுடன் தூரப்பிரதேசங்களிலுள்ள ஆசிரியர்கள் தங்கள் தேவைகளைக் காலதாமதமின்றிப் பூர்த்திசெய்வதற்கான வாய்ப்பும் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## வீதி திருத்த வேலைகள்

இருப்பிட்டி, திங்கள். புங்குடுதீவு பகுதியில் நீண்டகாலங்களாக சீர்செய்யாத வீதிகளை இவ்வாண்டில் திருத்துவதற்கான ஏற்பாடுகளை பெருந்தெருக்கள்திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வீதிகளை திருத்துவதற்கான ஏற்பாடுகள் சில மாதங்களுக்கு முன் மேற் கொள்ளப்பட்ட போதிலும் தார்ப்பீப்பாக்கள் இல்லாத காரணத்தினால் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுப் போட்டி

மானிப்பாய், திங்கள் ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி பாடசாலை முன்றலில் சிறப்பாக நடைபெற்றது

பிரதம விருந்தனராக திரு. மி. பேரின்பநாயகமும் சிறப்பு விருந்தினராக வணபிதா இம்மானுவலும் கலந்து கொண்டனர்

ஐக்கிய சன சமூக நிலையத்தினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர் (எ)

## கல்விக் காரியாலயம்

நெல்லியடி, திங்கள் நெல்லியடி பாதுகாப்புச் சபை இளைஞர்கள் மேற்கொண்ட பிரசார நடவடிக்கைகள் மூலம் நெல்லியடி பட்டன சபை பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரேத மின்பாவனை மிகப் பெருமளவுக்குக் குறைந்துள்ளது.

மக்கள் மத்தியில் இளைஞர்கள் சென்று. சட்டவிரோத மின் பாவனைமூலம் மின் மாற்றிகள் வெடிப்பதுபற்றியும் அதனால் சமுதாய வாழ்வில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றியும் விளக்கியதன் விளைவாக இச்சமூக விரோதச் செயல் கைவிடப்பட்டுள்ளது

## அபிராமியந்தாதி ஆய்வுரை நூல்

சுழிபுரம, திங்கள். புலவர் சே. சாந்தானராமன் எழுதிய அபிராமியந்தாதி ஆய்வுரை முதல் (இருபது பாடல்களுக்கு உரியது) தனியொரு நூலாக வழக்கம்பறை சனசமூக பஜனைச் சபையினர் வெளியிட்டுள்ளனர். கடந்த ஐந்து வருடங்களாக ஒவ்வொரு பாடல்களாக வெளியிடப்பட்ட நூல் பிரதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு அழகிய நூலாக உருப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது.

## 15 குடும்பங்களுக்கு சுய தொழில் உதவி

மாவிட்டபுரம், திங்கள். கடற்றொழிலின் நிமித்தம் கடலில் சென்று இறந்தும், காணாமல் போயும் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் சுய முயற்சியால் முன்னேற தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

மயிலிட்டிகரையைச் சேர்ந்த 15 குடும்பங்களுக்கு இந்த

(8ம் பக்கம் பார்க்க)

## வறுமைநிவாரண உணவுமுத்திரை

யாழ்ப்பாணம், செவ் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் இவ்வாரத்தினுள் யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களினாலும் அவ்வப்பகுதியில் பெறத்தகுதியுள்ளவர்களுக்கு வழங்கப்படவிருப்பதாக அறியப்படுகின்றது

கடந்த ஜூன், ஜூலை மாதங்களுக்கு வழங்கப்பெற்ற பொருள்களுக்கான உணவு முத்திரைகள் ப. நோ. கூ. சங்கங்களினால் இம்மாத இறுதிக்குள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஒப்படைக்கப்படவேண்டுமென்று சுற்றுநிருபம் அனுப்பப்பட்டிருந்த போதும் மேலும் அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி வரை நீடிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது (நெ-நி-எ)


TECHNICAL COURSES

G. C. E. (O/L) படித்தவர்களுக்கும், G.C.E. (A/L) பரீட்சை, எடுத்து முடிவை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கும் பிரத்தியேகமாக பின்வரும் பயிற்சி நெறிகள் 30-8-86ல் ஆரம்பமாகவுள்ளன.

1. Draughtsman Apprenticeship
2. Refrigeration and Air Conditioning
3. T V and Radio Technician
4. Electrical wiring Motor Rewinding
5. Tamil, English Shorthand and Typing

மேலதிக விபரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்க.

Registrar:
INSTITUTE OF TECHNICAL STUDIES,
VADDUKODDAI.
C 4258

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ மேற்கு ஜேர்மனி
★ ஹொலண்ட் ★ பிரான்ஸ்
★ அவுஸ்திரேலியா

ஆகிய நாடுகளுக்கு பயண ஒழுங்குகள் துரித கெதியில் நடைபெறுகின்றது.

★ லண்டனுக்கான பயண ஏற்பாடுகள் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்படுகின்றது.

மற்றும்
★ பாஸ்போட் ★ பொண்ட்
★ விசா ★ ரிக்கற்
யாவற்றிற்கும்
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ரஜீவன் ரவல்ஸ்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665
(A 1076)

# பெனாஸிர் மற்றும் 8 தலைவர்கள் மீது அரசத் துரோகக் குற்றச்சாட்டு

## ஆயுள்தண்டனை வழங்கப்படலாம்

இஸ்லாமாபாத், ஆக. 25 பாகிஸ்தானில் தற்போது சிறைவைக்கப்பட்டிருக்கும் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் செல்வி பெனாஸிர் பூட்டோவுக்கும் சிறையில் உள்ள ஏனைய எட்டு மக்கள் கட்சி தலைவர்களுக்கும் எதிராக அரசியல் துரோக செயல்கள் புரிந்ததாக குற்றம்சாட்டி கராச்சிப் பொலிசார் வழக்குத்தொடர விருக்கின்றனர். இக்குற்றச் சாட்டுக்களின் மீது ஆயுள் தண்டனை வழங்கப்படும் சாத்தியம் உண்டு.

அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சியை மேற்கொள்ளுமாறு மக்களை தூண்டிவிட்டதாகவும் ஏனைய எதிர்க்கட்சி தலைவர்களின் கருத்துகளை மேற்கோள்காட்டி அரசுக்கு எதிராக பிரசாரம் செய்ததாகவும் பொலிசார் செல்வி பெனாஸிர் மீது குற்றம்சாட்டியுள்ளனர்.

### உலகச் செய்திகள்

கடந்த ஜூலை மாதம் 31ம் திகதி செல்வி பெனாஸிர் தமது ஆதரவாளர்களின் ஊர்வலத்திற்கு தலைமை தாங்கிச் சென்று கராச்சியில்பல கூட்டங்களில் உரையாற்றியபோது குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

அரசாங்க தடைஉத்தரவுகளையும் மீறி எதிர்க்கட்சி கூட்டம் ஒன்றில் கடந்த 14ம் திகதி செல்வி பெனாஸிர் உரையாற்றுகையில் கைதுசெய்யப்பட்டு முப்பது நாட்களுக்கு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளார்.

இதற்கிடையில் ஜெனரல் ஸியாவுல் ஹக்கை பதவியில் இருந்து நீககுவதற்காக கடந்த திங்கள் ஆரம்பித்த இயக்கத்தை கைவிடப்போவதில்லை என்று ஜனநாயக மீட்பு இயக்கத்தின் தலைவர்கள் கூறியுள்ளனர்.

எனினும் செல்வி பெனாஸிருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு வழக்கிற்கும் ஸியா ஆட்சிக்கு எதிராக தற்போது நடைபெறும் இயக்கத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கிளர்ச்சிகளை உடன் நிறுத்தாவிடில் பயங்கர நடவடிக்கைகளை எடுக்கநேரிடுமென்று கிளர்ச்சியாளர்களை அரசு எச்சரித்துள்ளது மேலும் எதிர்க்கட்சிகளுடன் பேசும் வாய்ப்புகள் எதுவும் தற்போது இல்லை என்று பிரதமர் மொகமட்கான் ஜூனேஜோ செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

1990ம் ஆண்டுக்கு முன்னர் தேர்தல் நடத்தவேண்டிய அவசியமோ புதிய பிரச்சினையோ எமக்கு ஏற்பட்டுவிடவில்லைஎன்றும் அவர் கூறினார். [சி]

## பிரஜைகள்குழு முன்மாதிரி

ஊர்காவற்றுறை திங்கள் சரவணை பிரஜைகள் குழுவினர் மக்களின் பிணக்குகளைத் தீர்ப்பது மட்டுமன்றி பொது வேலைப் பணிகளிலும் இறங்கியிருக்கிறார்கள். சரவணை புன்னம்கண்டி மயானத்திற்கு மடம் கட்டுவதற்கு அறுநூறு ரூபாவும், சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்திற்கு மதில் கட்டுவதிற்கு அறுநூறுரூபாவும் ஆரம்ப வைப்பு நிதியாகக் கொடுத்துள்ளார்கள்.

## செந்தமிழ் விற்பன்னன்

புகழொடு தோன்றிய சான்றோர் வரிசையில் வைத்து மதிக்கப்படவேண்டியவர் தாவடியூர் பண்டிதர் செ.சிவப்பிரகாசம் ஆவார். இவர் சைவ மரபில் உதித்து வளர்ந்து சைவசித்தாந்தியாக வாழ்ந்து சிவப்பிரகாசத்துள் ஒன்றினார்.

தமது வாழ்க்கையில் ஒரு சிறந்த ஆசிரியனாக,சமயியாக, சாஸ்திரியாக, எழுத்தாளனாக, கவிஞனாக விளங்கியதுடன் சிறந்த உபந்நியாசியாகவும் இவர் திகழ்ந்தார். திருமுறைகளைப் பண்ணோடு ஓதும் பண்பினர். தம் மாணவர் உயர்ச்சி கண்டு உளம் இறும்பூதெய்தும் உத்தமர். கோயில் அல்லது சிதம்பரம், தில்லைக்கலம்பகம் முதலிய நூல்களின் ஆசான்.

தலங்காவல் பிள்ளையார், கற்புலத்து மனோன்மணி கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் போன்று பல கோயில்களுக்குத் திருவூஞ்சல் பாடிய புலவனாகிய இவரை இலக்கிய கலாநிதி பண்டிதமணி அவர்கள் ''சிவப்பிரகாசப் பேர் தாங்கும் செந்தமிழ் விற்பன்னனவன் அன்பன் தானே'' என அணிந்துரை நல்கியதில் இருந்து இவரின் பெருமைதனை அறிந்து கொள்ளலாம்.

த. கணேசபிள்ளை.

## ஹராரே மாநாட்டில்

## தெ. ஆபிரிக்காவுக்குஎதிரான தடைகள் முக்கிய விடயம்

ஹராரே, ஆகஸ்ட் 25 அணிசேரா உச்சிமாநாட்டுக்காக ஹராரே சென்றுள்ள சாட், நைஜீரியா, கானா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான தடைகள் பற்றிய விடயமே உச்சிமாநாட்டில் பிரதானமாக விவாதிக்கப் படும் என்று தெரிவித்துள்ளனர்

அடுத்தமாதம் முதலாம் திகதி ஹராரேயில் ஆரம்பமாகவுள்ள உச்சிமாநாட்டில் 101 அணிசேரா நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்வார்கள்.

பிரிட்டோரிய அரசுக்கு எதிராக தடைகளை விதிக்குமாறு அணிசேரா நாடுகளின் தலைவர்கள் ஐ. நா பந்தோபஸ்து சபையை வற்புறுத்துவார்கள் என்று ஆபிரிக்க தேசியகாங்கிரஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளது. மேலும் இங்கு ஈரான், ஈராக் பிரச்னையும் விவாதிக்கப்படும்.

இந்திய பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை அடுத்து அணிசேரா நாடுகளின் தலைவராக ஸிம்பாவே பிரதமர் திரு ராபட் முகாபே பதவியேற்பார். [சி]

## வட. பம்பாயில்

## உலகின் இரண்டாவதுபெரும் போதை பொருள் கடத்தல் முறியடிப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 25 பம்பாயில் நேற்று வருவாய் புலனாய்வுதுறை அதிகாரிகள் சுமார் ஐந்தரைக் கோடி ரூபாய் மதிபபுள்ள ஹிரோயினையும் சஞ்சாவையும் கைப் பற்றியுள்ளனர்.

வடபம்பாயில் வழிமறிக்கப் பட்ட ஒரு ட்ரக்கில் இருந்து அதிகாரிகள் 1041 கிலோ சஞ்சாவையும் 472கிலோ ஹிரோயினையும் கைப்பற்றியுள்ளனர். சணல் பயிர்களில மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த போதைப் பொருட்களில் பாகிஸ்தானின் அடையாளங்கள் இருந்ததாக டி. ஆர். ஐ. பிரதம இயக்குனர் திரு. பி வி குமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

உலகில் இதுவரை ஹிரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதில் இது இரண்டாவது மிகப் பெரிய அளவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

## வாஜ்பாய் யோசனை

புதுடில்லி, ஆகஸ்ட் 25 ''நாட்டின் சகல எல்லைப் பகுதிகளிலும் நிரந்தர பந்தோபஸ்து பகுதி ஒன்றை அமைக்கவேண்டு'' மென்று பாரதீய ஜனதா கட்சித் தலைவர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

வெளியிலிருந்து நாட்டுக்குள் அந்நிய ஊடுருவல்களையும், கள்ளக்கடத்தலையும், போதைவஸ்து கடத்தலையும் தடுப்பதற்கு இது பெரிதும் உதவுமென்று அவர் தெரிவித்தார்.

பஞ்சாப்பில் பயங்கரவாதிகளுக்கு எதிராக பந்தோபஸ்து படைகளின் நடவடிக்கைகளையும் அவர் பாராட்டினார். (சி)

## லொங்கோவால் கொலை தொடர்பாக ஒருவர் கைது

புதுடில்லி, ஆக.25 பஞ்சாப்பில் முன்னாள் அகாலிதள் கட்சி தலைவர் சன்ட் ஹர் ஜன் சிங் லொங் கோவாலின கொலை சதித்திட்டத்தில் பிரதான பங்கு வகித்த ஹல்வாசாவை சேர்ந்த குருமே சிங்கை பகிந்தா பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்தக்கொலைக்குபின் குருமே சிங் பாகிஸ்தான் தப்பிச் சென்றிருந்தார் என்றும் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மீண்டும் இவர் இந்தியாவினுள் நுழைந்தார் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை நேற்று ஹரீத்கோட் மாவட்டத்தில் காரில் சென்றமூவரை ஸ்கூட்டர் ஒன்றில் வந்த இரண்டு பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர். [சி]

## முதுகலைமாணிப்பட்டம் பெற்றவருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம்,செவ். ''என் பின்னவன் பெற்ற செல்வம் நான் பெற்ற செல்வமன்றோ'' என யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரி திரு கு. சோசுந்தரம் யாழ் நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்தக் கழகம் கல்வியில் முதுகலை மாணிப்பட்டம் பெற்ற தி. கமலநாதனுக்கு நடத்திய பாராட்டுவிழாவில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எனக்குப் பின்னர், கல்வியில் டிப்ளோமாப்பட்டம் பெற்று, முதுகலை மாணித் தேர்வுக்குத்தோற்றி ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்த தி கமலநாதன் தனது ஆராய்ச்சியின் முடிவுகள் 3ஆண்டுகளாக வெளிவராதிருக்கும் நிலையிலே வெளியிடப்பட்டு இன்று முதுகலைமாணியாகத் திகழ்வதனையிட்டு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ''என்பின் அவன்'' என்ற நிலைமாறி ''என்முன், இவன்'' என்ற நிலை இங்கு தோன்றியிருககிறது. இதனை எண்ணி- எனக்கேற்பட்ட நிலை இவருக்கும் ஏற்படாததை எண்ணி நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நல்லூர் வட்டாரப் பாடசாலைகளின் சமூகக்கல்வி ஆசிரியர் ஆலோசகராக விளங்கும் இவரது மாதிரி வகுப்புகள் பலவற்றை நான் பார்வையிட்டுள்ளேன். மிகுந்த ஆர்வத்துடனும் சிறப்பாகவும் இவர் கற்பிப்பதை அவதானித்துள்ளேன். தான் கற்பிக்கும் பாடம் சார்ந்ததாகவே இவர் தனது ஆராய்ச்சியை மேற்கொண்டு இப்பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் தொடர்ந்து மேலும் பல ஆராய்ச்சிகள் செய்து கல்வி உலகுக்கு அரும்பணியாற்ற வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில், யாழ். பல்கலைக்கழகக் கல்விப்பீடத்தின் சிரேட்ட விரிவுரையாளர் வ. ஆறுமுகம், தமிழ்த் துறை சிரேட்ட விரிரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம், இந்துப்பண்பாட்டுத் துறைத் தலைவர் கலாநிதி கோபாலகிருஷ்ணன், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் ச. பொன்னம்பலம், மயிலங்கூடலூர் பி. நடராஜன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

## சட்ட விரோத மின் பாவனை

ஊர்காவற்றுறை, திங்கள் நாரந்தனை சரவணைக் கிராமங்களில் சட்ட விரோத மின் பாவனையாளர்களின் வயர்களை, மின்சாரசபை உத்தியோகத்தர்களும், உள்ளுராட்சி உத்தியோகத்தர்க சில இளைஞர்களும் கைப்பற்றி கொண்டு சென்றனர்,


St. John's College, Jaffna
and
Chundukuli Girls' College, Jaffna.

ADMISSION - 1987.

(1) Vacancies exist, ONLY in the following Classes:

(a) Year One and Year Seven (St. John's and Chundukuli Girls' College).

(b) Year Ten (Only St. John's College).

(2) Children born between 01-02-1981 and 31-01-1982 only will be considered for admission to Year One Birth Certificate should be annexed along with the Application Form.

(3) Pupils to be considered for admission to Year Seven should be below the age of twelve on 31-01-1987.

(4) Pupils to be considered for admission to Year Ten should be below the age of fifteen on 31-01-1987

(5) Apply before the 13th of September, 1986 on forms available from the respective Schools from the 3rd of September, 1986 Application made on any other forms will not be considered.

(6) Please send stamped self-addressed long envelope and Postal Order drawn in favour of the "Principal" of the respective Schools for Rs 20/- per Application Form for Year Seven and Year Ten, and Rs. 10/- for Year One.

(7) Admission Test (for Year Seven and Year Ten) will be held at 8 30 a. m. on Saturday the 11th October, 1986.

PRINCIPALS.

A 1152

## "பாலரின் உடல் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்த வேண்டும்"

வல்வெட்டித்துறை, திங்கள் "பாலர் பாடசாலைகளில் சிறுர்களுக்கு கல்வி புகட்டுவதோடு மட்டும் நின்றுவிடாது, அவர்களது உடல் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்துவதன் மூலம் வளர்ந்து வரும் தமிழ் சமுதாயத்தில் திடகாத்திரமான மாணவர்களை உருவாக்குவதற்கு ஏதுவாக அமைகிறது",

இவ்வாறு வதிரி தமிழ்மன்ற பாலர் பாடசாலையின் 16வது ஆண்டு இல்ல விளையாட்டு போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. வே. கிருபானந்தன் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் திரு வி. தில்லைநாதன் தமது சிறப்புரையில், "இங்கு சிறுர்கள் பல விதமான விளையாட்டுக்களில்கலந்துகொண்டு காட்டிய திறமையையும், ஆர்வத்தையும் பார்க்குமிடத்து நாம் படிப்பில் மட்டுமல்ல தீரம் மிக்க விளையாட்டுக்களிலும் சளைத்தவர்களல்ல என்பதனையும் நிரூபித்துக்காட்டிவிட்டார்கள்" என்ருர்.

திருமதி பு. கிருபானந்தன் வெற்றி பெற்ற சிறுர்களுக்கு பரிசுகளை வழங்கினுர்.

திருமதி சிவமலர், தங்கவேல் வரவேற்புரையையும், செல்வன் சோ. மகேஸ்வரன் நன்றியுரையும் வழங்கினுர்கள். (எ)

## பாலுணவுகள் அன்பளிப்பு

மாவிட்டபுரம், திங்கள் கடற்ருெழிலாளர் பாதிக்கப்பட்டதால் கஷ்ட நிலையிலிருக்கும் கடற்ருெழிலாளர் குடும்பங்களுக்கு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் பால் உணவுகளை அன்பளிப்புச்செய்தது.

மயிலிட்டிக் கரையோரங்களைச் சேர்ந்த சுமார் 100 குடும்பங்களுக்கு இந்த பால் உணவுகள் வழங்கப்பட்டன.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா இதற்கான ஏற்பாட்டைச்செய்து பாலுணவுகளை மேற்படி குடும்பங்களுக்குக் கையளித்தார். (எ)

## இலவச பாடப்புத்தகங்கள்

மானிப்பாய், திங்கள் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு இலவசப்பாடப்புத்தகங்கள் இவ்வாரத்தில் விநியோகிக்கப்படவிருக்கின்றன.

சிலவருடங்களாக மாணவர்களுக்குக் கிடைக்காதிருந்த 6ம ஆண்டு தமிழ் புத்தகமும் இந்த முறை கிடைக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

முதலாம் தவணையிலேயே கிடைத்திருக்க வேண்டிய புத்தகங்களே இப்போது மூன்ரும் தவணை விநியோகிக்கப்படவிருப்பதுகுறிப்பிடத்தக்கது.

மானிப்பாய் கல்விவட்டாரத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள சுமார் பத்தாயிரம் புத்தகங்கள் வரும் 29, 30ம் திகதிகளில் விநியோகிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது. (எ)

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 10 (1986-8-26)
கிழமை: செவ்வாய்
திதி: ஸப்தமி பி.இ. வரை
நட்சத்திரம்: பரணி பி.ப.வரை

மேடம்: பொருள் விரையத்திற்கு இடமுண்டு. முகமன் பேசுவோர் விடயத்தில் கவனம் வேண்டும்.

இடபம்: குடும்பம் இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். காதலர்கள் வாழ்க்கை இன்று மலரும். எவ்விடயத்திலும் நன்மை பயக்கும். சுப நாள்.

மிதுனம்: சகோதர சஞ்சலமுண்டு உற்சாகம் குன்றும். கடமையிலும் கருத்து வேற்றுமைக்கிடமுண்டு. நிதானம் அவசியம்.

கடகம்: மாதரு வழியாலும் மகிழ்ச்சிகரமான செய்திக்கிடமுண்டு. வியாபார விருத்திக்குமிடமுண்டு. சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு.

சிங்கம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகலாம். பொருள் லாபமுண்டு. புண்ணிய விருப்புமுண்டு குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும்.

கன்னி: ஆசாரக்குறைவுக்குமிடமுண்டு தொழில் புரியும் இடத்தில் அவதானம் வேண்டும். சிலர் வாழ்க்கையில் கடன் படவும் நேரிடும்.

துலாம்: வேண்டியளவிற்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும். புதிய பாதையில் வீறுநடை போடுவீர்கள் களஸ்த்திர சேர்க்கையுமுண்டு.

விருச்சிகம்: குடும்பப் பிரிவுகள் தோன்றலாம். வீண் விவாதங்களுக்கு இடமுண்டு. பெண்கள் அவதானமாயிருக்கவும். பொறுமை நன்று.

தனுசு: திகைக்க வைக்கும் சம்பவம் ஒன்றும் இடம்பெறலாம். ஸ்தல யாத்திரை ஒன்றும் மேற் கொள்ளப் படலாம். செல்வாக்கும் பெருகும்.

மகரம்: வித்தையில் வெற்றிக்கிடமுண்டு. புதிய நண்பர்கள் புடை சூழ்வர். தொழில் முன்னேற்றமுண்டு.

கும்பம்: வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும். சகோதர மகிழ்ச்சிக்கிடமுண்டு தொழில் துறையிலும் நற் செய்தி கிட்டும்.

மீனம்: பணம் பறிபோவதற்கிடமுண்டு. தனி வழி நாட்டத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். எதிர் பார்த்த விடயத்தில் முட்டுக் கட்டை தோன்றும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/6211 இலக்க வழக்கில் வாதிகள் ஏழாலை தெற்கு கதிரவேலு திருவிளங்கத்துக்கும் பெண் சந்திராவுக்கும் விற்பனவு திகதி வரை போக வேண்டிய தீர்வைத் தொகை 13,930/- ரூபாவும், மேலும் இதில் 7 000/- ரூபாவுக்கு 19-6-1985 தொடக்கம் 20-11-1985 வரை வருடமொன்றுக்கு 36% வீதவட்டியும், அதன்பின்சேர்நத முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும், வழக்குச்செலவு 4 423 ரூபா 10 சதமும் விறபனவுச்சலார்களும், இத்தொகையைப் பிரதிவாதியாகிய பலாலி வடக்கு அண்ணமலை முத்துத்தம்பியிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம 1986ஆம் செப்ரெம்பர் மீ 18வ (18-9 1986) முற்பகல் பத்து மணி தொடக்கம் குறித்த இவ் வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும.

### குறிந்த ஆதன விபரம்


வடமாகாணம யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இறை "வயலுயரம்" பரப்பு நிலை இலா மூன்றேகாலும் 3¼) கிணறும் பெரியவீடும் தலைவாசலும அடுக்களையும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு மாணிக்கம் பசுதர்சுக்குரிய ஆதனம் வடக்கு மயிலாய பிள்ளை நவரத்தினத்தினுதனம் மேற்கும் தெற்கும் ஒழுங்கை இவ்வெல்லைப்படி இதடங்கலும் பதிவு இல. ஏச் 52ச/154.

வி. செ. குட்டிப்பிள்ளை.
விற்பனை ஆணையாளர்.

643, கே கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(C 4253)

## 75 ம் நாள் நினைவஞ்சலி



அர்ச்சுன
(லெப்டினன்ற்)
ச. தமிழரசுவரன்
(குட்டியா)

தமிழ் மண்
மீட்கவந்துதித்தது.
4-4-1960.
தமிழ்மண் மீட்பில்
வீரசொர்க்கம்
12-6-1986.

அன்பிற்கோர் ஆசை நண்பனே
அறிவிற்கோர் அழகு ஆசானே
வீரத்திற்கோர் வேங்கை அர்ச்சுனனே.
விலைமதிக்க முடியாத வீரத்தமிழரசுவரனே.
சீறிடும் வேங்கையாய் சிறிதும் அச்சமின்றி
சிங்கள வெறியருடன் களத்தினில் முதல்வனாய்
நின்று போராடி பல பேரை வதம் செய்து
மிகுதியோரை புறமுது கிட்டோடிடச் செய்து
உன்னுடன் போரிட முடியாமையினுல் தூரநின்று
செல்லால் அடித்தனரே வஞ்சகர்கள்
உனது வீரச்சாதனையை மன்னர் மக்கள் கண்ணீருடன்
எடுத்தோம்ப அறிந்தோம் உனதுபுகழ்.
வையத்தில் தமிழர் வாழுமட்டும் உனது
நிழல் எமது நெஞ்சத்தில் வாழ்க உனது நாமம்.
வாழ்க உனது புகழ்.
தமிழீழம் ஒன்றுதான் எமது குறிக்கோள்
தத்தளிக்கும் தமிழினத்திற்கு உனை
ஈன்று தந்தளித்த தாய் தந்தையர்க்கும் சகோதரர்களுக்கும் எமது

நன்றி,
குருநகர் நண்பர்கள்.
(C 4260)

## 45-ஆவது நாள் நினைவஞ்சலி



இராஜசுந்தரம்
ஸ்ரீகாந்தன்
(வேங்கை தேவா)

மலர்வு: 20-7-65
உதிர்வு; 13-7-86

எங்களருமை மைந்தனே
எல்லோர்க்கும் இனியவனே
ஈழத்தாயின் மகனுகி மறைந்தாயோ
எம்மைப்பிரிந்து சகோதரன் கலங்கி நிற்க
சகோதரிகள் கண்ணீர் விட
உன்னைப் பெற்றோர் துடித்திட
ஏகினையோ விண்ணுலகம்
செயல்வீரா ஸ்ரீகாந்தா
கடமை கண்ணியம் கட்டுப்பாடு என
சிறந்த சாரணனகவே நீ வாழ்ந்தாய்
காலம் முழுவதும் உன் நினைவை
மறந்திடுவோமோ ஐயா நாம்!
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
பப்பா, அம்மா,
அண்ணு விஜி,
அக்காமார்: சந்தினி, லக்ஷ்மினி, அன்புத்
தங்கை சுநந்தினி,
உறவினர்கள்,
நண்பர்கள்.

13-7-86 அன்று நடைபெற்ற எமது மகனின் இறுதிச் சடங்கில் சகல உதவிகளையும் ஈந்து கௌரவித்த தேவாவின் வீரத் தோழர்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

[C 4167]



1986-ம் ஆண்டு யாழ்/கல்வித்திணைக்களத்திஞல் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் தோற்கடிக்கப்படாத (19 வயதின் கீழ்) மகாஜனக் கல்லூரி முன்னணி வீரர்கள்.

எம்மையெல்லாம் வழிநடத்திச் சென்ருய்

எல்லோரையும் தவிக்கவிட்டு எங்கு சென்ருயோ?

கலங்குகின்றேம்

யாழ். ஹட்டன் நாஷனல் வங்கி
முகாமையாளர்
எஸ். சூரியகுமாரனது
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேம்!

எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்,
39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[A-1185]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 26-8-86

# பொல்காவலை ஐ. தே. க. எம். பி. சுனிலுக்கு 1 வருட சிறைத் தண்டனை!

கொழும்பு, திங்கள்

பொல்காவலைத் தொகுதி ஐ.தே.க. எம்.பி. திரு சுனில் ரஞ்சன் ஜெயக்கொடிக்கு ஒரு வருடகாலக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம மாஜிஸ்ரேட் கொலின் ஏ. அமரசிங்க இந்த சிறைத்தண்டனையுடன் ஆயிரம் ரூபா அபராதத்தையும் விதித்துள்ளார்.

பொல்காவலைப் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எடிசன் குணதிலகாவை பயமுறுத்தியும் ஏசியுமுள்ளார் என்ற குற்றச்சாட்டின் மீதான விசாரணையை அடுத்தே இந்தத் தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது.

எதிரி தரப்பு வழக்கறிஞர் செய்த மனுவின்பேரில் இந்த சிறைத்தண்டனை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபா அபராதத்தைச் செலுத்தத்தவறினால் மேலும் ஆறுமாதகாலக் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார்.

திரு.ஜெயக்கொடி இந்த அபராதத்தை உடனடியாகச் செலுத்தினார்.

நீண்டநாட்களாக நடைபெற்ற விசாரணையின் பின்னர் பிரதம நீதிபதி இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

திரு ஜெயக்கொடி நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மனுச் செய்யப் போவதாக அறிவித்துள்ளார். (ஒ)

## யாழ் – மட்டுநகர் பஸ்சேவை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம்-மட்டக்களப்புக்கான பஸ்சேவை நாளை முதல் யாழ்ப்பாண டிப்போவினால் நடாத்தப்படவுள்ளது. இச்சேவை காலை 5 மணிக்கு யாழ் பஸ்டிப்போவிலிருந்து ஆரம்பமாகும்.

கடந்த நான்கு மாதங்களாக இடைநிறுத்தப்பட்ட இச்சேவை நாளைமுதல் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (கை)

## மக்கள் விரோதிக்கு மரணதண்டனை

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்

ஊத்தைக்காந்தன் என்றழைக்கப்படும் மக்கள் விரோதிக்கு கடந்த 24ம் திகதி யாழ் நகரில் தம்மால் மரணதண்டனை வழங்கப்பட்டதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இவர் விடுதலை ஸ்தாபனங்களின் பெயரைப் பயன்படுத்தி தனியார் வாகனங்களை கடத்தி வீடுகளில் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டுவந்தார்.

ஏற்கனவே சக விடுதலை இயக்கமொன்றினால் எச்சரிக்கப்பட்ட பின்பும் இவரது கொள்ளை நடவடிக்கைகள் தொடர்ந்தன.

இதனால் மக்கள் விடுதலைப் படையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவரது சகாக்கள் சிலரையும் மக்கள் விடுதலைப் படையினர் தேடிவருகின்றனர். [ஒ]


### குடிநீர் வழங்க ஏற்பாடு

நெடுந்தீவு, திங்கள்

யாழ் மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தீவுப் பகுதிகளுக்கு விரைவில் குடிநீர் வழங்க சகல ஏற்பாடுகளும் சமூகசேவைகள் பகுதியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

குடிநீர்வழங்கலுக்கான கேள்விப்பத்திரங்கள் இப்பொழுது சமூகசேவை இலாகாவால் கோரப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. (இ)

## "வெடிச்சத்தம் கேட்பதால் கவனமாக இருக்குமாறு என்னிடம் கூறினார்"



யாழ்ப்பாணம், செவ்வாய்

"கோட்டைப் பக்கத்தில் வெடிச் சத்தம் கேட்பதால் கவனமாக இருக்குமாறு என்னிடம் கூறிவிட்டுச் சென்ற முகாமையாளர் 'ஷெல்' தாக்குதலில் பலியாகிவிட்டார் என்பதை மறுநாள் அறிந்தேன்"

யாழ். ஹற்றன் நாஷனல் வங்கி முகாமையாளர் ச. சூரியகுமார் (35 வயது) மரண விசாரணையில் சாட்சியமளித்த வங்கிப் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம். ஜோசப் இவ்வாறு கூறினார்.

யாழ் பதில் நீதவான் க.கேசவன் நேற்று மரண விசாரணை நடத்தினார்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் மேலும் கூறியதாவது:-

"சம்பவதினம் காலை 7மணிக்குக் கடமைக்கு வந்தேன். மாலை 5 மணிக்கு முகாமையாளர் சூரியகுமார் சைக்கிளில் வங்கிக்கு வந்து பாதுகாப்பு நடவடிக்கைகளைப்பற்றி விசாரித்து விட்டுச் சென்றார்.

பிற்பகல் 4 மணி முதல் கோட்டை ராணுவ முகாமிலிருந்து 'ஷெல்' தாக்குதலும், துப்பாக்கி வெடிச் சத்தமும் கேட்டபடியிருந்தது.

முகாமையாளர் சென்று 10 நிமிடத்தின் பின் ஆஸ்பத்திரி வீதி, சாந்தி தியேட்டர் ஒழுங்கை முகப்பில் 'ஷெல்' வெடித்தது. நான் அச்சத்தினால் வெளிவரவில்லை வங்கியின் முனீஸ்வரன் வீதி வாசலில் மறுநாள் காலைவரை கடமையாற்றினேன்,

இச் சம்பவத்தில் பலியான றெஜினா பிரிஸின் (18 வயது) மரணவிசாரணையின் போது ஜேக்கப் அன்ரன் பாய்வா சாட்சியமளிக்கையில் இறந்தவரும் குடும்பத்தினரும் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கடையின் பின்புறத்தில் வசித்து வந்ததாகவும் இச்சம்பவத்தில் தத்துவம் பீரிஸ் படுகாயமடைந்தனர். என்றும் கூறினார்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர்களை சாட்சியமளிக்க வருமாறு தெரிவித்த பதில் நீதவான் விசாரணையை வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைத்தார் [இ]

## அதிர்ச்சியினால் இளம்பெண் மரணம்!

யாழ்ப்பாணம், செவ்

ஹட்டன் நெஷனல் வங்கி முகாமையாளர் 'ஷெல்' தாக்கி பலியானார் என்ற செய்தி கேட்டு சக பெண் ஊழியர் ஒருவர் அதிர்ச்சியுற்று மரணமானார்.

ஆனைக்கோட்டையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் ஹட்டன்நெஷனல் வங்கிக்கிளையில் சுருக்கெழுத்தாளராக கடமையாற்றிய இளம்பெண் செல்வி சத்தியபாமா விசுவலிங்கம் வயது28] என்பவரே அதிர்ச்சியடைந்த நிலையில் மரணமானவராவர். [எ]

## ஷெல்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தரே.

ஜே. ரி. பீரிஸ் இடுப்பில் 'ஷெல்' பட்டுஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப் பட்டிருந்தார்.

கொக்குவிலைச்சேர்ந்தராஜா தலையில்காயப்பட்டு உடன் சத்திரசிகிச்சைக்குட்படுத் தப் பட்டிருந்தார்.

மேலும், 'ஷெல்' தாக்குதலுக்குள்ளாகி யாழ்.ஆஸ்பத்திரியில், சிகிச்சை பெற்றுவரும் பெண்ஒருவரும் அதிதீவிரசிகிச்சைபிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

## ஊர்காவல்படை அச்சுறுத்தல்

மூதூர், திங்கள்

மூதூர் தெஹிவத்த கிராமத்தைச் சேர்ந்த 43 தமிழ்க் குடும்பங்களை ஊர்காவல் படையினர் அச்சுறுத்தியதையடுத்து அங்கிருந்து இடம்பெயர்ந்து கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஈச்சந்தீவு பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளனர்,

இவர்களுக்கு நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு திருமலை பிரஜைகள் குழு நடவடிக்கைகள் எடுத்துளளது. [எ]

## 15 குடும்பங்களுக்கு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பல்வேறு பொதுநல ஸ்தாபனங்களின் உதவியைப்பெற்று தையல் இயந்திரங்களை மேற்படி குடும்பங்களுக்கு வழங்கும் பணியை வண. ரி. தேவராஜன் அடிகள், சமூக சேவையாளர் திரு. செ தனபாலசிங்கம் ஆகியோர்மேற்கொண்டிருந்தனர். (எ)

## மரண அறிவித்தல்

### கு. வீ. சின்னத்துரை

ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த கு. வீ. சின்னத்துரை 25-8-86 அன்று காலமானார். இவர் அவிசாவலை பிரபல சுருட்டு வர்த்தகரும், காலஞ்சென்ற பூமணியின் அன்புக்கணவரும், திருமதிகள் சோமசுந்தரம் மகேஸ்வரி, இராமலிங்கம் மாலனி, சிவராசா புவனேஸ்வரி, கணேசலிங்கம் பரமேஸ்வரி, முருகப்பிள்ளை சந்திரமதி, திரு. குலசபாநாதன் ஆகியோரின் அன்புத்தந்தையும், ஐ சிவராசா, க. சோமசுந்தரம், காலஞ்சென்ற வே. இராமலிங்கம், S கணேசலிங்கம், S. முருகப்பிள்ளை, சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், தம்பிப்பிள்ளை, நாகம்மா செல்லம்மா, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 26-8-86 செவ்வாய் பி ப. 2 மணிக்கு மறவன்புலவு மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. குலசபாநாதன்,
வீடமைப்புத் திட்டம்,
மறவன்புலவு.

[C 1184]

### செல்வி சத்தியபாமா விஸ்வலிங்கம்

ஆனைக்கோட்டை விஸ்வலிங்கம் மகள் சத்தியபாமா (Hatton National Bank Jaffna) காலமாகிவிட்டார். இவர் முன்னைநாள் ஆசிரியர் கலாசாலை அதிபர் விஸ்வலிங்கம் நாகேஸ்வரி தம்பதிகளின் மகளும் சுலோசனா [சவுதி] சுஜாதா (பாறெயின்) சுமித்திரா (பாறெயின்] மகேந்திரராசா (U.K) சுவர்ணலதா (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் சகோதரியும் நடராசா (சவுதி) இரத்தினேஸ்வரன் (பாறெயின்) மகேஸ்வரன் (பாறெயின்) ஆகியோரின் மைத்துனியுமாவார். அவரது பூதவுடல் 26 - 8 - 86 செவ்வாய்க்கிழமை காலை 10 - 30 மணியளவில் கரையாம்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

"யமுனா"
ஆனைக்கோட்டை.

[C-1065]

## மரண அறிவித்தல்

### குழந்தைவேலு – கதிரவேலு

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் வசிப்பவரும், முன்னைநாள் மலேசியா பிரபல வர்த்தகரும், யாழ்ப்பாணம் மலாயன் கபே ஸ்தாபகரும் ஆகிய குழந்தைவேலு - கதிரவேலு அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற குழந்தைவேலு பொன்னுச்சி ஆகியோரின அன்பு மகனும், தெரணியகலை பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற செல்லத்தம்பி, நல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சிவயோகத்தின் அன்புக்கணவரும், சிறீஸ்கந்தராஜா, சிறிசந்திரகாசன் தயாநிதி. சாந்தநிதி. இன்பநிதி, சகலகலாநிதி, கிருப நிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாதன், மகேந்திரன், துரைராசா, பிறேம்குமார், வனஜா ஆகியோரின் அன்புமாமனாரும், கிசோர்த்தமன், கீத்தனன், சுக சினி, அமிர்தவர்சினி ஜெகஜனனி, மஞ்சுபாஷினி, சஞ்சீவன், கார்த்திகாயினி, அரங்கேசன், மைத்திரேகி ஆகியோரின் அன்புப் பேரனும், சபாரத்தினம், மீனாட்சி, குமாரசாமி காலஞ்சென்ற அருளையா, செல்லம்மா நல்லதம்பி, இராசம்மா வினாசித்தம்பி ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற கனகசபாபதி, கனகம்மா துரையப்பா, ஆகியோரின் அன்பு மைத்துனரும், இ துரையப்பாவின் அன்புச் சகலனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் 234, நாவலர்வீதி [ஆனைப்பந்தியடி] இல்லத்தில் நடைபெற்று புதன்கிழமை[27-8-86] காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[C 4269] தகவல்: க. சிறீஸ்கந்தராஜா [மகன்]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.